“திரை கடல் ஓடியும் திரவியம் தேடு” என்ற நம் முன்னோரின் வார்த்தைக்கேற்ப அறிவுச் செல்வத்தையும் பொருள் செல்வத்தையும் தேடி படிப்பதற்காகவும், உழைப்பதற்காகவும் கடல், மலை கடந்து பல நாடுகளில் பரவி இருக்கிறது நம் தமிழ்ச் சமூகம். பல நாடுகளில் மாற்று கலாச்சாரத்தில் வாழ்ந்தாலும், வேறு மொழி பேசுபவர் மத்தியில் உழைத்தாலும் நம் தமிழ்க் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், நாகரிகத்தையும், மொழியையும் கட்டிக் காப்பதில் தமிழர்கள் வல்லவர்கள். அதிலும் குறிப்பாக தமிழ்க் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழுகின்ற நாடுகளில் ஒரே குடும்பமாக வந்து நம் தாய்மொழியில் இறைவனை வழிபடுவதும், திருப்பலி கொண்டாடுவதும் பெருமைக்குரிய காரியம். அதனடிப்படையில் ஆஸ்திரேலியக் கண்டத்தில் பெர்த் மாநகரத்தில் வாழும் தமிழ்க் கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமூகம் கடந்த பத்து ஆண்டுகளாகத் திறம்பட செயல்படுவதை நினைத்து மகிழ்கிறேன். அருட்தந்தையர் டெரிராஜ் மற்றும் ஜான் செபாஸ்டின் இருவரின் முயற்சியால் உருவான பெர்த் தமிழ்க் கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமூகம் எனும் குழந்தையை ஆரம்ப காலத்தில் நானும் கரம்பிடித்து வழிநடத்தியிருக்கிறேன் என்பதில் பெருமை கொள்கிறேன். விசுவாசமும் சமூக அக்கறையும், தமிழ்ப் பற்றும் கொண்ட பெர்த் தமிழ்க் கத்தோலிக்க சமூகம் தொடர்ந்து வளர்ச்சியடைய வாழ்த்துகிறேன், ஜெபிக்கிறேன்.

அருட்பணி. கில்பர்ட் மஊச.